**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 246 of 2024

Deposition of D.W. 2

Name of the Witness: திரு.கருணாநிதி

Date : 28.01.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அப்பா பெயர் காளியண்ணன். அம்மா பெயர் அம்மையக்காள். என் தாத்தா பெயர் முத்துகவுண்டர். 6ம் பிரதிவாதி என்னுடைய அக்கா. என் அப்பாவிற்கு நானும், 6ம் பிரதிவாதி மட்டும் தான் வாரிசுகள். எனக்கு, என் அப்பா, என் சகோதரி 6ம் பிரதிவாதிக்குள் இன்னும் பாகபிரிவினை ஏற்படவில்லை. 6ம் பிரதிவாதிக்கு 30 வருடத்திற்கு முன்பு திருமணமானது என்றால் சரிதான். 6ம் பிரதிவாதியின் கணவர் தான் 2ம் பிரதிவாதி மூர்த்தி. 6ம் பிரதிவாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் மகன், மகள். 5ம் பிரதிவாதிக்கு மைதிலிக்கு 3 வருடத்திற்கு முன்பு திருமணமானது. 2, 4, 5, 6 பிரதிவாதிகள் ஒன்றாக தான் இருக்கிறார்கள். பின்பு சாட்சி 4ம் பிரதிவாதி அன்பழகன் சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டுவிட்டார். ஆனால் அவர்களுடன் தான் இருக்கிறார் என்று சொல்கிறார். 5ம் பிரதிவாதி மைதிலிக்கு திருமணமான பிறகு 2, 4, 6 பிரதிவாதிகள் ஏக குடும்பமாக இருக்கிறார்கள் என்றால் இல்லை, 4ம் பிரதிவாதி ஓசூரில் வேலை செய்து கொண்டு அங்கேயே இருக்கிறார்.

2) நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 2, 4 முதல் 6 பிரதிவாதிகளும் நானும் ஒரே வழக்கறிஞரை வைத்து வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. 2, 4 முதல் 6 பிரதிவாதிகளின் வழக்கிறஞர் யார் என்று எனக்கு

தெரியாது. என்னுடைய வழக்கறிஞரின் பெயர் பி.கே.முருகன். அமுதவள்ளி போட்ட வழக்கிற்கு நான் தனியாக பதிலுரை தாக்கல் செய்துள்ளேன். நான் அது போல் தனியாக பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றாலும், 2ம் பிரதிவாதியின் பதிலுரையை நான் ஏற்று கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 109/2022 வழக்கிற்கான விவரங்களை நான் சொல்லி தான் தாக்கல் செய்யப்பட்டது. எனக்கு தற்போது 47 வயதாகிறது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய வயது 43 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 1976ல் பிறந்தேன். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 109/2022 வழக்கில் 4ம் பிரதிவாதி கேசவனின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. அதில் 4ம் பிரதிவாதியின் முகவரியை நான் சொல்லி தான் போடப்பட்டது, தற்போது எனக்கு நியாபகம் இல்லை. கேசவன் மணி (எ) ஜெகநாதனின் மகன் இல்லை, மருமகன். நான் அசல் வழக்கு எண் 109/2022ல் 4ம் பிரதிவாதி அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி ஜெகநாதன் (எ) மணியின் மகன் என்று குறிப்பிட்டுள்ளது தவறு தான் என்றால் சரிதான்.

3) அசல் வழக்கு எண் 109/2022 வழக்கில் தாவா சொத்து முழுவதும் மூர்த்தி என்பவர் பட்டா பெற்று அவர் குடும்பத்தினர் அனுபவித்து வந்தனர் என்றும், மூர்த்தியின் தந்தை உயிருடன் இருக்கும் காலத்திலேயே மூர்த்திக்கு 2004ல் பாத்தியப்படுத்தி விட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். 2004க்கு முன்பே 2002ல் 1, 2 பிரதிவாதிகள் அவருடைய அப்பா பழனிகவுண்டருடன் சேர்ந்து சின்னபையன் மற்றும் பழனிக்கு சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவா 2ம் இன சொத்து நாகனம்பட்டியில் இருப்பது 1, 2

பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 2020ல் அன்பழகன் கல்லூரியில் படித்து வந்தார் என்றால் சரிதான். அவரை அவருடைய அப்பா 2ம் பிரதிவாதி மூர்த்தி தான் செலவு செய்து படிக்க வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. மூர்த்தி குடும்பத்தில் 2001, 2004ல் பாகபிரிவினை ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. 2001ல் மூர்த்தி குடும்பத்தில் பாக பிரிவினை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) தாவா 1ம் இன சொத்தின் சர்வே எண் 2/1. அதன் பட்டா எண் 183. அதன் மொத்த விஸ்தீர்ணம் 5 ஏக்கர் 41 சென்ட். அதற்கு செக்குபந்தி மேற்குபுறம் ராஜா, தெற்குபுறம் அரசு சாலை, கிழக்கு பக்கம் நேரமரதஅள்ளி எல்லை. வடக்கு பக்கம் என்னென்று தற்போது நியாபகம் இல்லை. கிழக்கு பக்கம் நேரமரதஅள்ளி எல்லையில் பாண்டுரங்கன் மகன் சக்திவேல் நிலம் உள்ளது, நாகப்பட்டி செல்லும் சாலையுள்ளது. நாகப்பட்டி செல்லும் சாலை தெற்கு வடக்காக உள்ளது. நேரமரதஅள்ளி என்பது ஒரு எல்லையின் பெயர். என் அக்காவை திருமணம் செய்து கொடுத்த பிறகு தான் மூர்த்தியின் குடும்பத்தை பற்றி தெரியும். என் அக்காவை திருமணம் செய்து கொடுப்பதற்கு முன்பாக மூர்த்தியின் குடும்பத்தில் சொத்துக்கள் எப்படி வாங்கினார்கள், எப்படி அனுபவித்து வந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

5) வா.சா.ஆ.11 என் பெயரில் இருக்கும் கிரைய பத்திரத்திற்கு முன்பாக நான் வேறு எந்த சொத்தும் வாங்கவில்லை. என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட

சொத்துக்கள் ஒரு பட்டாவில் உள்ளது. அந்த பட்டாவில் எத்தனை சர்வே எண்கள் வருகிறது என்று எனக்கு தெரியாது. என் அப்பா பெயரில் 1 1/2 ஏக்கர் நிலமுள்ளது. என் அப்பா அந்த சொத்தை அவர் சம்பாதித்து வாங்கினார், 1970ல் வாங்கியிருப்பார். அந்த சொத்தை தவிர என் அப்பா வேறு எந்த சொத்தும் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பட்டா எண் 1294ல் என் அப்பா காளியண்ணன் பெயரில் சர்வே எண் 493/1ல் 0.46.20ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் சொத்து சம்பந்தமாக 2020லிருந்து பிரச்சனை என்றால் எனக்கு தெரியாது. 2, 4 முதல் 6 பிரதிவாதிகள் குடும்பத்தில வா.சா.ஆ.10 பாகபிரிவினை பத்திரம் ஏற்பட்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியும். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அந்த பாகபிரிவினை பத்திரமே என் மூலமாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த பாகபிரிவினை ஏற்பட்ட போது அவர்கள் பாகபிரிவினை சம்பந்தமாக குடும்பத்தில் இருந்த பண பரிவர்த்தனை பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகபிரிவினையில் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது.

6) என்னுடைய கிரைய பத்திரத்தில் எவ்வளவு ரூபாய்க்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். எவ்வளவு ரூபாய்க்கு முத்திரை தாள் வாங்கப்பட்டது என்று தெரியாது. அந்த கிரைய பத்திரம் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. அந்த கிரைய பத்திரத்திற்கு 4ம்பிரதிவாதிக்கு ஒரு கோடி ரூபாய் பணம் கொடுத்தேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் ஒரு

கோடி ரூபாய் கொடுத்து சொத்து வாங்கியது சம்பந்தமாக வருமான வரி கட்டவில்லை, முன்னால் அமைச்சர் முல்லை வேந்தனிடம் பணத்தை கடனாக வாங்கி கொடுத்தேன். நான் கொடுத்த பணத்தை கொண்டு அன்பழகன் வேறு சொத்து வாங்கியிருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. எனக்கும் மூர்த்தி, அன்பழகன் குடும்பத்திற்கும் எந்த பிரச்சனையும் இல்லை, சகஜமாக தான் இருக்கிறோம். சொத்தை 6.9.2021ல் கிரையம் வாங்கி 15.12.2021ல் அடமானம் வைத்து கடன் வாங்குவதற்கு என்ன காரணம் என்றால் அப்போது எனக்கு பணம் தேவைப்பட்டது. ஆடு, மாடு வளர்ப்பதற்காகவும், வீட்டு செலவிற்காகவும் கடன் வாங்கினேன். நான் சொத்தை வாங்கிய பிறகு வாதி பெயரிலும், அவரது கணவர் மணி பெயரிலும், 1ம் பிரதிவாதியின் பெயரிலும் தருமபுரி நில அபகரிப்பு பிரிவு மற்றும் பாலக்கோடு காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் சொத்து இருப்பதால் என்னை நீதிமன்றம் சென்று பரிகாரம் தேடி கொள்ளுமாறு கூறி விட்டார்கள் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது அன்பழகன் தான் புகார் கொடுத்ததாக சொல்கிறார். எனக்கு கிரையம் கொடுத்த பிறகு அன்பழகன் போலிசில் புகார் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. கிரையம் எனக்கு கொடுப்பதற்கு முன்பாக தான் அன்பழகன் போலிசில் புகார் கொடுத்தார். போலிசில் புகார் கொடுத்த பிறகு தான் நான் அசல் வழக்கு எண் 109/2022 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அன்பழகன் புகார் கொடுத்த பிறகு தான் வாதிக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று தெரிந்த பிறகு தான் நான் சொத்தை வாங்கினேன்.

*7) அசல் வழக்கு எண் 179/2021 பாலக்கோடு சார்பு நீதிமன்றத்தில் 4 ஏக்கர் 1 சென்டிற்காக எட்டாயியம்மாள் என் மீதும் மற்றவர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் வாதி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அதனால் அசல் வழக்கு எண் 179/2021 வழக்கு விவரங்கள் வாதிக்கு தெரியாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண் 179/ 2021 வழக்கில் கண்ட சொத்து மூர்த்தி தான் கிரையம் வாங்கினார். நான் சொல்வது தவறு என்றாலும், தாவாவில் பழனியப்ப கவுண்டரும், மூர்த்தியும் வாங்கியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா 1ம் இன சொத்தை வாங்குவதற்கு எனக்கு எந்த வசதி வாய்ப்பும் இல்லை என்றால் சரியல்ல. தாவா 1ம் இன சொத்து வாதி, 1 மற்றும் 3 பிரதிவாதிகளின் பொது குடும்ப சொத்து என்றால் சரியல்ல. வாதி, 1. 3 பிரதிவாதிகளின் பாகத்தை ஏமாற்ற வேண்டும் என்று தான் 2, 4, 5, 6 பிரதிவாதிகளுடன் நானும் சேர்ந்து பாகபிரிவினை பத்திரத்தையும், என் பெயரில் மோசடியாக கிரைய பத்திரத்தையும் தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல.*

*8) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 மற்றும் பி.சா.ஆ.12, பி.சா.ஆ.13 ஆவணங்கள் வாதி தாக்கல் செய்த வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. அதனால் வாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 246/2024 வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றாலும் நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 109/2022 தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.*

Sd/Tmt.U.Monica, M.L.
Additional District Judge,
Dharmapuri.